செ.வெ.எண்:15 நாள்:07.11.2017

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் கந்து வட்டி வசூலித்தல் தொடர்பான புகார்களை அளிக்க கடந்த 24.10.17 முதல் இதற்கென பிரத்யேகமாக ஓர் புகார் மையம் மாவட்ட ஆ.ட்சியர்அலுவலகத்தில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பொதுமக்களிடமிருந்து மேற்படி பொருளில் புகார்களை கைபேசி எண் 9629711194 என்ற எண்ணில் பெறப்படும் புகார் மனுக்கள் உடன் வட்ட அலுவலகத்திற்கு துணை வட்டாட்சியர்க்கும் காவல் துறைக்கும் உடனடியாக விசாரணைக்கும் நடவடிக்கைக்கும் அனுப்பப்படுகிறது. இவ்வாறு வரப்பெறும் புகார்கள் 1 வாரத்திற்குள் பைசல் செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் காவல்துறையினர் மற்றும் வருவாய் துறையினர் ஆகியோர்களுடன் ஆய்வு செய்ய்பபட்டு முடிவு செய்யப்படுகிறது. இந்த சிறப்பு முறையின் கீழ் கடந்த 24.10.17முதல் 4.11.17வரை மொத்தம் 95 புகார்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு வரப்பெற்றுள்ளது. இதில் உண்மையான புகார்கள் என அறியப்பட்டவைகள் மீது மாநகர காவல் ஆணையர் கட்டுப்பாட்டில் உள்ள காவல் நிலையத்தில் மொத்தம் 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. காவல் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டில் உள்ள காவல்நிலையங்களில் 56 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. இதில் அதீதிய வட்டி வசூல் செய்யப்பட்ட புகார்கள் மனுக்கள் மீது நாளது தேதிவரை 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் உண்மையென கண்டறியப்பட்டவைகளில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். எனவே கந்து வட்டி வசூல் செய்யப்பட்டு வருகிறது என்ற புகார்கள் வரப்பெற்றவுடன் உடனுக்குடன் இரு முனைகளிலும் விசாரணை செய்து அவைகள் உண்மை என்று அறியப்பட்டவுடன் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வட்டிக்கு பணம் கொடுப்போரும் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ளவர்கள் கண்டிப்பாக வட்டிக்கு பணம் கொடுப்போர் சட்டத்தின் கீழ் உடன் பதிவு செய்து தாசில்தாரிடம் லைசென்ஸ் பெற்றுக்கொள்ளவேண்டும். ஒரு வாரத்திற்குள் இந்த உரிமம் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறினால் உரிமம் பெறாமல் வட்டிக்கு பணம் கொடுப்பது தெரியவந்தால் அவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் யாரும் கந்து வட்டி வசூல் செய்யப்படுவர்கள் குறித்து அச்சப்படவேண்டாம்.

கந்து வட்டி வசூல் செய்யப்படுவது தொடர்பான புகார் மனுக்கள் சம்பந்தப்பட்ட காவல்துறை மற்றும் வருவாய் துறையினரிடம் அளிக்கும் நேர்வில் உடன் விசாசரணை செய்து அவர்களுக்கு நியாயமான பரிகாரம் வழங்கப்படும் புகார்கள் உண்மை என தெரிய வரும் நேர்வில் கந்து வட்டி வசூல் செய்யப்படுவர்கள் மீது சட்டப்படியான கிரிமினல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் இதன் மூலம் மாவட்ட ஆ.ட்சியர் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.